தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

பங்குனி 9, திருவள்ளுவர் ஆண்டு—2053

2022 மார்ச் 23, புதன்கிழமை

சென்னை, புனித ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் மாண்புமிகு பேரவைத் தலைவர் **திரு. மு. அப்பாவு** *அவர்கள் தலைமையில் காலை 10–00 மணியளவில் பேரவை கூடியது.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்:

"நயனோடு நன்றி புரிந்த பயனுடையார்
பண்புபா ராட்டும் உலகு."

நீதி வழுவாமல் நன்மைகளைச் செய்து பிறருக்குப் பயன்படப் பணியாற்றுகிறவர்களின் நல்ல பண்பை உலகம் பாராட்டும்.

1. வினாக்கள்—விடைகள்

உடுக்குறியிட்ட வினாக்கள்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினாக்கள்-விடைகள். வினா வரிசை எண் 41, மாண்புமிகு உறுப்பினர் திரு. சி. மகேந்திரன் அவர்கள், மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள்.*

41—

மருத்துவமனையாகத் தரம் உயர்த்துதல்

***10179—திரு. சி. மகேந்திரன்:**

மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மடத்துக்குளம் தொகுதி, எரிசினம்பட்டி ஆரம்ப சுகாதார நிலையத்தை மருத்துவமனையாகத் தரம் உயர்த்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. மா. சுப்பிரமணியன், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) மடத்துக்குளம் தொகுதி, உடுமலைப்பேட்டை ஒன்றியம், எரிசினம்பட்டியில் 30 படுக்கை வசதிகள் கொண்ட மேம்படுத்தப்பட்ட ஆரம்ப சுகாதார நிலையம் ஒன்று செயல்பட்டு வருகிறது. மேலும், எரிசினம்பட்டி மேம்படுத்தப்பட்ட ஆரம்ப சுகாதார நிலையத்திலிருந்து 17 கி.மீ. தொலைவில் 224 படுக்கைகள் மற்றும் அனைத்து வசதிகளுடன்கூடிய உடுமலைப்பேட்டை அரசு வட்ட மருத்துவமனை மிகச் சிறப்பாக செயல்பட்டு வருகிறது. இங்கு நாளொன்றுக்கு சராசரியாக 865 வெளிநோயாளிகளும், 115 உள்நோயாளிகளும் சிகிச்சை பெற்று வருகிறார்கள். எனவே, எரிசினம்பட்டி மேம்படுத்தப்பட்ட ஆரம்ப சுகாதார நிலையத்தை மருத்துவமனையாக தற்சமயம் தரம் உயர்த்த வேண்டிய அவசியம் எழவில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. சி. மகேந்திரன் அவர்கள் இருக்கையில் இல்லை. மாண்புமிகு உறுப்பினர் முனைவர் பொள்ளாச்சி V. ஜெயராமன் அவர்கள்.

முனைவர் பொள்ளாச்சி V. ஜெயராமன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டதைப்போல, எரிசினம்பட்டிக்கு 17 கிலோ மீட்டர் தொலைவில் உடுமலைப்பேட்டை உள்ளது. ஆனால், எரிசினம்பட்டியில் இருந்து மேற்குத் தொடர்ச்சி மலையில் மாவடப்பு, குறுமலை, காட்டுப்பட்டி, குளிப்பட்டி, பூச்சிகோட்டாம்பாறை, கருமுட்டி, கீழ்குருமலை, மேல்குருமலை, ஈசல்முட்டு, மயிலாடும்பாறை, நல்லார்காலனி மற்றும் மேற்குத் தொடர்ச்சி மலையின் அடிவாரத்தில் தேவனுரும்புதூர், ஆண்டியூர், ராவணாபுரம், வல்லகுண்டாபுரம், கரட்டூர், கரட்டுமடம், புங்கமுத்தூர், சின்னபொம்மன் சாலை, உடுக்கம்பாளையம், கொடுங்கியம், ஜிலேப்பிநாயக்கன்பாளையம், ரெட்டிப்பட்டி, சாலையூர், சக்கரைப்புதூர் போன்ற மலையடிவார கிராமங்கள்

2022 மார்ச் 23]

உள்ளன. இவையெல்லாம் எரிசினம்பட்டியிலிருந்து உட்புறமாக மேற்குத் தொடர்ச்சி மலையின் அடிவாரத்தில் உள்ளன. கிட்டத்தட்ட 30,000 மக்கள் இங்கு வசித்து வருகிறார்கள். ஆதிவாசிகள் பெருமளவில் உள்ளார்கள். அடிக்கடி விஷக்கடி, பாம்புக்கடி போன்றவை நிகழும்போது, இவர்களை இரவு நேரத்தில் உடுமலைப்பேட்டைக்குக் கொண்டு செல்வதற்கு சிரமமாக இருக்கிறது. எனவே, மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள், இந்த எரிசினம்பட்டி தரம் உயர்த்தப்பட்ட ஆரம்ப சுகாதார நிலையத்தை அரசு மருத்துவமனையாகத் தரம் உயர்த்தித் தருவாரா என்று தங்கள் வாயிலாகக் கேட்டு அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. மா. சுப்பிரமணியன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மக்கள்தொகை எண்ணிக்கை, மக்களின் பயன்பாடு ஆகியவற்றை முறையாக ஆய்வு செய்ததற்குப் பிறகு, ஒன்றிய அரசின் அனுமதியைப் பெற்று, மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு சென்று அந்த மருத்துவமனையைத் தரம் உயர்த்துவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் முனைவர் பொள்ளாச்சி V. ஜெயராமன் அவர்கள். நன்றி சொல்லுங்கள்.*

முனைவர் பொள்ளாச்சி V. ஜெயராமன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்களுடைய பதிலுக்கு நன்றி. விரைவில் மத்திய அரசின் அனுமதியைப் பெற்று. . .*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. செ. ராஜேஷ் குமார் அவர்கள். (குறுக்கீடு) சரி, சரி. (குறுக்கீடு)*

திரு. செ. ராஜேஷ் குமார்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. . . (குறுக்கீடு)*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *நன்றி சொல்லியாகிவிட்டது. நன்றி சொல்லிவிட்டு, உட்கார்ந்தாகிவிட்டது. விடுங்கள். (குறுக்கீடு) மாண்புமிகு உறுப்பினர் திரு. செ. ராஜேஷ் குமார் அவர்கள்.*

[2022 மார்ச் 23

திரு. செ. ராஜேஷ் குமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. . . (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: உங்களுக்கு விளக்கமாகப் பதில் சொல்லிவிட்டார்கள். நான் திரும்பவும் உங்களுக்குச் சொன்னேன். நன்றி சொல்லிவிட்டீர்கள், அப்படியே உட்காருங்கள். திரு. ராஜேஷ் குமார், கேள்வி கேளுங்கள்.

திரு. செ. ராஜேஷ் குமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கன்னியாகுமரி மாவட்டம், கிள்ளியூர் சட்டமன்றத் தொகுதி, முஞ்சிறை ஊராட்சி ஒன்றியத்துக்குட்பட்ட செம்மானுலை பகுதியில், 1958 ஆம் ஆண்டு பெருந்தலைவர் காமராஜர் காலத்தில் கொண்டு வரப்பட்ட அரசு ஆரம்ப சுகாதார நிலையத்தில் இருக்கின்ற பழமையான கட்டடங்களை இடித்து, புதிய கட்டடங்கள் கட்டி, சுற்றுச்சுவர் அமைத்து, அந்த ஆறுதேசம் ஆரம்ப சுகாதார நிலையத்தைத் தரம் உயர்த்த அரசு முன்வருமா என்பதைத் தங்கள் வாயிலாகக் கேட்டு அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. மா. சுப்பிரமணியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வணக்கத்திற்குரிய தமிழக முதல்வர் அவர்களின் அறிவுறுத்தலின்படி கடந்த 2 நாட்களுக்கு முன்பு, நான் கன்னியாகுமரி மாவட்டத்திற்கு நேரடியாகச் சென்று ஆய்வு செய்தேன். நாகர்கோவில் போன்ற பல்வேறு பகுதிகளை ஆய்வு செய்தபோது, ஆய்வுக் கூட்டத்தில் சட்டமன்ற உறுப்பினர் அவர்கள் கலந்துகொண்டு, அங்கேயும் இந்தக் கருத்தைத் தெரிவித்தார். உடனடியாக மாவட்ட ஆட்சித் தலைவரிடம் எடுத்துச் சொல்லி, அந்த ஆரம்ப சுகாதார நிலையத்தைச் சுற்றிலும் சுற்றுச் சுவர் அமைப்பதற்கும், பழைய கட்டடத்தை இடித்துவிட்டு புதிய கட்டடம் கட்டுவதற்குமான திட்ட மதிப்பீடுகளைத் தயாரிக்குமாறு சொல்லப்பட்டிருக்கிறது. நிச்சயமாக அது விரைந்து செய்து தரப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 10–05

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.எஸ். சரவணக்குமார் அவர்கள்.

2022 மார்ச் 23]

திரு. கே.எஸ். சரவணக்குமார்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தேனி நகரின் மையப் பகுதியில் போதிய இடவசதியுடன் மிகப் பெரிய அரசு மருத்துவமனை அமைந்துள்ளது. அங்கு மருத்துவக் கல்லூரி மருத்துவமனை வந்த பிறகு, இந்த அரசு மருத்துவமனை முழுமையான பயன்பாடு இல்லாமல் இருக்கிறது. இதை முழுமையாகப் பயன்படுத்தும் வகையில், புற்றுநோய் சிறப்பு மருத்துவமனையாகவும், குழந்தைகள் நல சிறப்பு மருத்துவமனையாகவும் தரம் உயர்த்தித் தருமாறு மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. மா. சுப்பிரமணியன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தேனி மாவட்டத்தில் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனை மிகச் சிறப்பான பயன்பாட்டில் இருக்கிறது. ஏற்கெனவே மாவட்ட அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனை வேறு ஒரு பகுதிக்கு மாற்றப்பட்டுள்ள நிலையில், மாண்புமிகு உறுப்பினர் குறிப்பிட்டுள்ள மருத்துவமனைக்குத் தேவையான அடிப்படை வசதிகளை கூடுதலாக்கி, மேலும் சிறப்பாகச் செயல்படும் வகையில் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்பதைத் தங்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. A.K. செல்வராஜ் அவர்கள்.*

திரு. A.K. செல்வராஜ்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கோவை மாவட்டம், காரமடை ஒன்றியத்திற்குட்பட்ட தேக்கம்பட்டி என்ற கிராமம் அதிக மக்கள்தொகையைக் கொண்ட கிராமம். அந்தக் கிராமத்தில் இருக்கின்ற மக்கள் ஆரம்ப சுகாதார நிலையத்திற்குச் செல்ல வேண்டுமென்றால் 30 கி.மீ. தொலைவில் உள்ள சிறுமுகை ஆரம்ப சுகாதார நிலையத்திற்கும், காரமடை, சீலியூர் போன்ற பகுதிகளிலுள்ள ஆரம்ப சுகாதார நிலையங்களுக்கும் செல்ல வேண்டிய சூழ்நிலையில் இருந்து வருகின்றனர். ஏற்கெனவே நான் கடந்தமுறை நடைபெற்ற சட்டமன்றக் கூட்டத்தொடரில் பேசுகின்றபோது, மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் இந்தப் பகுதியில் புதிய ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்க வேண்டுமென்று கோரிக்கை வைத்தேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: கேள்வியைக் கேளுங்கள்.

திரு. A.K. செல்வராஜ்: அங்கு அரசு அதிகாரிகளை அனுப்பி, ஆய்வு செய்து, முன்மொழிவுகளை அரசுக்கு அனுப்பி வைத்திருக்கிறார்கள். ஆகவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இந்த ஆண்டு தேக்கம்பட்டி கிராமத்தில் புதிய ஆரம்ப சுகாதார நிலையம் அமைத்துத் தருவார்களா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. மா. சுப்பிரமணியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மரியாதைக்குரிய சட்டமன்ற உறுப்பினர் அவர்கள் எடுத்துச் சொன்னதைப்போல, கடந்த ஆட்சிக் காலத்தில், 4 ஆண்டுகளாக, புதிய ஆரம்ப சுகாதார நிலையங்கள் எதுவும் தொடங்கப்படவில்லை. இந்த ஆண்டு புதிய ஆரம்ப சுகாதார நிலையங்கள் வேண்டுமென்ற கோரிக்கை ஒன்றிய அரசுக்கு விடுக்கப்பட்டுள்ளது. வரும் நிதியாண்டில் 20-க்கும் மேற்பட்ட புதிய ஆரம்ப சுகாதார நிலையங்களை செயல்படுத்துவதற்கான வாய்ப்பு இருக்கிறது. அப்படி வாய்ப்பு இருக்கும்பட்சத்தில், மாண்புமிகு உறுப்பினர் குறிப்பிட்ட தேக்கம்பட்டி கிராமத்தில் மக்கள்தொகை மற்றும் மக்களின் பயன்பாடு போன்ற பல்வேறு விஷயங்களைக் கருத்தில் கொண்டு, அங்கு ஏற்கெனவே ஆய்வு செய்திருப்பதாகச் சொல்லியிருக்கிறார். தேவைப்பட்டால் மீண்டும் ஓர் ஆய்வுக் குழுவை அங்கு அனுப்பி, புதிய ஆரம்ப சுகாதார நிலையத்தை அடுத்த நிதியாண்டில் அமைப்பதற்குத் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்வோம் என்பதைத் தங்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. எம்.சி. சண்முகையா அவர்கள்.

திரு. எம்.சி. சண்முகையா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த 10 ஆண்டுகளில் நிறைவேற்றப்படாத திட்டங்களை பத்தே மாதங்களில் நிறைவேற்றிய தமிழக மக்களின் பாதுகாவலரும், வேளாண் மக்களின் பாதுகாவலருமான, (மேசையைத் தட்டும் ஒலி) தமிழக முதலமைச்சர், மாண்புமிகு தளபதியார் அவர்களை வணங்குகிறேன். ஒட்டப்பிடாரம் சட்டமன்றத் தொகுதி மிகவும் பின்தங்கிய தொகுதியாகும். சுதந்திரத்திற்காகப் பாடுபட்ட

2022 மார்ச் 23]

தியாகிகள் வாழ்ந்த வீரம் மிகுந்த பூமியாகும். ஒட்டப்பிடாரம் தொகுதிக்குட்பட்ட புதுக்கோட்டை, வல்லநாடு, ஒட்டநத்தம் ஆகிய கிராமங்களில் அரசு மேம்படுத்தப்பட்ட ஆரம்ப சுகாதார நிலையம் சிறப்பாகச் செயல்பட்டு வருகிறது. போதுமான இடவசதி அங்கு இருக்கிறது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணைக்கிணங்க கொரோனா பெருந்தொற்றைக் கட்டுப்படுத்திய ஆற்றல் மிக்க மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் அந்தப் பகுதி மக்களின் நலன் கருதி, அதை அரசு மருத்துவமனையாகத் தரம் உயர்த்தித் தர வேண்டுமென்று மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகக் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. மா. சுப்பிரமணியன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தில் இருக்கின்ற அனைத்து அரசு ஆரம்ப சுகாதார நிலையங்களையும் அரசு மருத்துவமனைகளாகத் தரம் உயர்த்த வேண்டுமென்பது அனைத்து மன்ற உறுப்பினர்களின் கோரிக்கை என்பதில் மாறுபட்ட கருத்து இருக்க முடியாது. இருந்தாலும், மக்களின் பயன்பாடு, மக்கள்தொகை போன்ற பல்வேறு விஷயங்கள் ஒன்றிய அரசின் விதிமுறைகளுக்குட்பட்டிருக்கின்றன. எனவே, ஒன்றிய அரசின் அனுமதியைப் பெற்று, எதிர்காலத்தில் அரசு மருத்துவமனைகளாகத் தரம் உயர்த்துவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்பதைத் தங்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *எல்லோருக்கும் பொதுவான பதிலைச் சொல்லிவிட்டார்கள்.*

வினா வரிசை எண் 42, மாண்புமிகு உறுப்பினர் திரு. மு.பெ. கிரி, மாண்புமிகு வணிக வரி மற்றும் பதிவுத் துறை அமைச்சர் அவர்கள்.

42—

சார்–பதிவாளர் அலுவலகக் கட்டடம்

***6917—திரு. மு.பெ. கிரி:**

மாண்புமிகு வணிக வரி மற்றும் பதிவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—